**தலைப்பு 298 – அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய தொகுப்பு அறிக்கையில் 2021 ஏப்ரல் 29 ஆம் திகதியில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஏப்ரல் 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

| அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட காசோலை மீதிகளின் வரவு மற்று செலவுகளுக்கிடையிலான வேறுபாடுகள் ரூபா.2,093,408 அவதானிக்கப்பட்டன. 2020 யூலை மற்றும் ஆகஸ்ட்டில் சம்பளக் கொடுப்பனவிற்கு போதுமான நிதி இல்லாததால், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதியத்திலிருந்து பெறப்பட்ட காசோலையின் மீதி ரூபா.2,093,408 சேர்க்கப்படாததே இவ்வேறுபாட்டிற்கான காரணமாகும். | 2020 யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில், திணைக்களத்தின் ஊழியர்களுக்கு சம்பளக் கொடுப்பனவுக்காக திறைசேரியிலிருந்து போதிய நிதி இல்லாததால், ரூபா. 2,093,408 பெறப்பட்டது. இது CIGAS கணினி நிரலில் இணைக்கப்பட்ட போது, தலைமை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கட்டுநிதியாக காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக காசோலை மீதிகளில் வரவுக்கும் செலவிற்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | காசோலை மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகளும் ஓரே மாதிரியாக காணப்பட வேண்டும். |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

| அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவாக இனங்காணப்பட்ட பெறுமதியான திணைக்களத்தின் விரிவான மீதிகளின் குறிப்பில் காட்டப்பட்டுள்ளதற்கமைய ரூபா. 7,831,253.35 ஆன போதிலும் நிதிச்செயலாற்றல் கூற்றில் இப்பெறுமதி ரூபா. 2,809,510 ஆக காட்டப்பட்டிருந்தன. எனவே இவற்றுக்கிடையிலான வேறுபாடு ரூபா. 5,021,743.35 ஆக காணப்படுகின்றது. | நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளுடன் தொடர்புடைய பெறுவனவுகள் மற்றும் ஒப்பந்த கணக்குகளில் பெறப்பட்ட ரூபா. 2,809,510 ஆக காட்டப்பட்டிருந்தது. மீதி இருப்புக்களின் அடிப்படையில் ரூபா. 7,831,253 ஆக காணப்பட்ட ஏனைய பெறுவனவுகளின் மாதாந்த பொழிப்பு அறிக்கையின் மூலம் திறைசேரிக்கு மட்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். | விரிவான மீதிகளின் குறிப்பில் காட்டப்பட்டுள்ள பெறுமதியானது நிதிச்செயலாற்றல் கூற்றிலும் ஏனைய பெறுவனவுகள் காட்டப்பட வேண்டும். |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

| அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் மாதாந்த கணக்குகளின் பொழிப்பு அறிக்கைக்கு இணங்க முற்பணமாக அறவிடப்பட்ட பெறுமதி ரூபா. 6,241,204 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றுக்களில் அப்பெறுமதி காட்டப்பட்டிருக்கவில்லை. | முற்பண அறவீடுகளின் பெறுமதி மற்றும் குறுக்குப் பதிவேடுகளின் பதியப்படவில்லை. அதன்படி, காசாக அறவிடப்பட்ட பெறுமதி ரூபா.519,563 காசுப்பாய்ச்சல் கூற்றில் வேறு பெறுவனவுகளில் காட்டப்பட்டிருந்தது. குறுக்கு பதிவேடுகள் காசாக வசூலிக்கப்படாததினால் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளக்கப்படாதிருந்தது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் திணைக்களத்தின் கட்டமைப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் எங்களுக்கு வழங்கப்பட்ட மாதிரிக்கமைய ஒவ்வொரு ஆண்டுத் தொடக்கத்திலும் அமைச்சிற்கு செயல் நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகின்றது. இதன் பின்னர், செயல் நடவடிக்கை திட்டத்துடன் திணைக்களத்தின் கட்டமைப்புககள் தொடர்பான விடயங்களும் உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் மீளமைக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிறுவனக் கட்டமைப்புக்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய ஒவ்வொரு நிறுவனத்தினதும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய ஒவ்வொரு நிறுவனமும் அதன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குக்களை திணைக்களம் அடையாளம் கண்டுகொண்டுள்ள போதிலும் தரவுகளை சேகரிப்பதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்காக தனித்தனியான தரவுகள் சேகரிக்கப்படாது நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றத்துடன் தொடர்புடைய திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளின் முன்னேற்றத்திற்கு ஏற்ப அறிக்கையிடப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குக்களை அடைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 5 நல்லாளுகை

### 5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 சனவரி 28 ஆம் திகதிய டிஎம்ஏ/சிஜஆர்-எடிட்/2016 இன் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களமானது காலாண்டிற்கு ஒரு கூட்டத்தின் படி வருடத்திற்கு 04 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களமானது 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு (01) கூட்டத்தை மட்டுமே நடாத்தியிருந்தது. | நாட்டில் கொரோனா தொற்று காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடத்த முடியவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். 2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் முதல் கூட்டம் 2021 மார்ச் 18 ஆம் திகதி நடைபெற்றது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் சுற்றறிக்கைக்கமைய நடத்தப்பட வேண்டும். |

## 6 மனித வள முகாமைத்துவம்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட 19 சிரேஷ்ட பதவிகள் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், உதவி பணிப்பாளர் பதவிகளுக்கான 09 வெற்றிடங்கள் அதாவது 47 சதவீதமான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. | முகாமைத்துவ சேவைகள் பிரிவிற்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளுவது தொடர்பான தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. | சேவைகளின் தேவைகளினைக் கருத்தில் கொண்டு நிறுவனத்தில் உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஆ) | அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் மட்ட பதவிகள் 30 இல் 26 அதாவது 86 சதவீதமான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. | ஆய்வக உதவியாளர்கள், அளவீட்டு சேவை உதவியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிக்கமர்த்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | -அதே- |